**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT**

| | | | | |
|---|---|---|---|---|
| | | OS. No. | | 76/2016 |
| | | P/W's | : | PW1 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | புஷ்பம் | CASTE | : | |
| W/O | தங்கவேல் | RELIGION | : | இந்து |
| VILLAGE | தெத்துார் டி மேட்டுப்பட்டி | CALLING | : | |
| TALUK | வாடிப்பட்டி | AGE | : | 60 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 21.11.2025**

**குறுக்கு விசாரணை**

1. எனக்கு எழுதப்படிக்க தெரியாது. எனக்கு சுமார் 37 வருடங்களுக்கு முன்பு திருமணம் நடந்தது. எனக்கு 4 பிள்ளைகள். எனது முதல் பிள்ளைக்கு சுமார் 30 வயதிருக்கும். 1ம் பிரதிவாதி சீனிக்கு 1971ம் வருடம் திருமணம் நடந்தது என்றாலும் அதற்குபின்புதான் எனக்கு திருமணம் நடந்தது என்றால் சரிதான். எனக்கு 1980 க்கு முன்பே திருமணம் நடந்தது என்றால் எனக்கு வருடம் தெரியாது. எனது திருமணத்தை எனது அண்ணன் 1ம் பிரதிவாதி உடன்இருந்து நடத்தினார் என்றால் எனது அப்பா அம்மா திருமணத்தை நடத்தினார்கள், 1ம் பிரதிவாதி உடன் இருந்தார்.

2. எனது திருமணத்தை 1ம் பிரதிவாதியும் அவரது மனைவியான 5ம் பிரதிவாதியும் செலவு செய்து நடத்தினார்கள் என்றால் எனது அப்பா அம்மாவுடன் 1ம் பிரதிவாதியும் கல்யாணத்தை நடத்தினார். 1ம் பிரதிவாதிக்கு திருமணம் நடந்தபோது நானும், 2ம் வாதியும் சிறுமிகளாக இருந்தோம் என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு படிக்க தெரியாது. வழக்கு தாக்கல் செய்த விவரங்களை நானும் 2ம் வாதியும் சேர்ந்துதான் வழக்கறிஞருக்கு சொன்னோம்.

3. வழக்குச்சொத்துக்களை பற்றிய விவரங்கள் வழக்கு தாக்கல் செய்த காலத்திலேயே எனக்குத்தெரியும். வழக்குச்சொத்தின் பங்கு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 2ம் வாதிக்கு எப்போது கல்யாணம் ஆனது என்றால் எனது அப்பா அம்மா இருந்த காலத்திலேயே கல்யாணம் நடந்தது, வருடம் எனக்குத்தெரியாது. வழக்கு தாக்கல் செய்யும்போது எந்த வருடத்தில் எனக்கும் 2ம் வாதிக்கும் திருமணம் நடந்தது என்று எனது வழக்கறிஞரிடம் சொல்லவில்லை என்றால் சரிதான்.

4. எனது அப்பா எந்த தேதியில் இறந்தார் என்று எனக்கு தெரியாது என்றாலும் வழக்கை தயார் செய்த காலத்தில் எனது வழக்கறிஞரிடம் சொல்லவில்லை என்றாலும் சரிதான். எனது அம்மா எந்த தேதியில் இறந்தார் என்று எனக்கு தெரியாது என்றாலும் வழக்கை தயார் செய்த காலத்தில் எனது வழக்கறிஞரிடம் சொல்லவில்லை என்றாலும் சரிதான். வழக்குச்சொத்தில் எந்த தேதியிலிருந்து அனுபவத்தில் நாங்கள் உள்ளோம் என்று வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

5. வழக்குச்சொத்தின் 4 இலக்கச்சொத்தான கிணற்றை 1ம் பிரதிவாதியும் எனது சித்தப்பா மகனான முத்துமாணிக்கமும் சேர்ந்து முருகேசன் என்பவருக்கு விற்பனை செய்து விட்டதால் அந்த சொத்தை வழக்கில் சேர்த்துள்ளோம். வழக்கில் 3ம் இலக்கச்சொத்து எனது அப்பாவிற்கு பாத்தியப்பட்டது என்பதைக்காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவருக்குப்பின் எங்கள் குடும்பத்தில் கூட்டு அனுபவத்தில் இருந்ததை என்பதைக்காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

6. எனது அப்பாவிற்கு பாத்தியப்பட்ட சொத்து 5 ஏக்கருக்கு மேல் இருக்கும், எவ்வளவு என்று அளந்தால் தான் தெரியும். எனது அப்பாவிற்கு 8 ஏக்கர் சொத்து பாத்தியப்பட்டது என்று வா.சா.ஆ.1 வழக்கறிஞர்அறிவிப்பில் சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 வழக்கறிஞர் அறிவிப்பை 4 ஏக்கர் 67 செண்ட் இடத்திற்கும், 2 ஏக்கர் 88 செண்டு இடத்திற்கும், 2 செண்டு இடத்திற்கும் அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான்.

7. வா.சா.ஆ.10 இறப்புச்சான்றிதல் 18.02.2025ல் தான் பெறப்பட்டுள்ளது என்றால் தாமதமாக பதிவு செய்ததால் அப்போதுதான் கிடைத்தது. நாங்கள் யாரையும் விசாரிக்காமல் தவறான இறப்பு தேதி குறிப்பிட்டு வா.சா.ஆ.10 இறப்புச்சான்றிதழை வழக்கிற்காக தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.13 எனது தாயாரின் இறப்புச்சான்றிதழ் வழக்கிற்காக பின்தேதியிட்டு தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த காலத்தில் 1ம் பிரதிவாதி பெயரில்தான் வழக்குச்சொத்திற்கான பட்டா இருந்தது என்றால் சரியல்ல.

8. வா.சா.ஆ.11 வழக்குச்சொத்திற்கான பட்டா 07.06.2023 தேதியிட்ட உத்தரவுப்படி பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்குத்தெரியாது. வா.சா.ஆ.11 பட்டா வழக்கிற்காக பின்தேதியிட்டு தயார் செய்யப்பட்டுள்ளது என்றால்

சரியல்ல. வழக்கில் 3, 4 இலக்கச்சொத்துக்களின் உரிமையை காட்டும் ஆவணங்களை தாக்கல் செய்யாததால் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. எனது அப்பத்தா தங்கம்மாள் எந்த வருடம் இறந்தார் என்று எனக்குத்தெரியாது. எனது அப்பத்தா தங்கம்மாளுக்கு எனது அப்பாவும் எனது சித்தாப்பா பழனிச்சாமி செட்டியார் என்று 2 பிள்ளைகள் மட்டும்தான் என்றால் சரிதான்.

9. எனது சித்தப்பாவிற்கு ஒரு மகன்மட்டும்தான் உள்ளார். எனது அப்பா காலத்திலிருந்தே 1ம் பிரதிவாதி வழக்குச்சொத்தில் உள்ள தகரம் போட்ட மண் வீட்டில் தான் குடியிருக்கிறார் என்றால் சரிதான். அந்த வீட்டில் வசித்தபோதுதான் எனக்கும் 2ம் வாதிக்கும் 1ம்பிரதிவாதி பிள்ளைகளுக்கும் திருமணம் நடந்தது என்றால் சரிதான். தற்போதுவரை 1ம் பிரதிவாதி குடும்பத்தினர் மேற்படி வீட்டில் தான் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான், 5ம் பிரதிவாதியும் அங்குதான் குடியிருக்கிறார்,

**மேலும் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/-M.P.Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி